# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 141/மா/2018
ஆணை நாள்: 8.7.2019

நக்கீரன் பத்திரிக்கை செய்தி. – தாமாக முன்வந்து முறையீடாக பதிவு செய்யப்பட்டது.

மாநகராட்சி நல அலுவலர் மற்றும்
மாநகராட்சி ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி. – **எதிர் மனுதாரர்கள்**

திண்டுக்கல் மாநகராட்சியில், சுகாதாரப் பிரிவில் முறைகேடுகள் நடைபெறுவதாக 2018 ஜூன் மாத நக்கீரன் வார இதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து இப்பத்திரிக்கை செய்தியினை முறையீட்டு மனுவாகப் பதிவு செய்து முறையீட்டு மனு எண்.141/2018 என எண்ணிடப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாநகராட்சியில், சுகாதாரப் பிரிவில் முறைகேடுகள் நடைபெறுவதாக 2018 ஜூன் மாத நக்கீரன் வார இதழில் வெளியிடப்பட்ட செய்தியில் திண்டுக்கல் மாநகராட்சியின் சுகாதாரப் பிரிவில் 700 துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வந்ததாகவும் ஆனால் தற்பொழுது 100 பணியாளர்கள் பணிபுரிவதாகவும் ஆனால் தினமும் 250 நபர்கள், 300 நபர்கள் பணிபுரிவதாக பட்டியல் தயாரிக்கப்பட்டு மாநகர நல அலுவலரால் மாநகராட்சி பணம் முறைகேடாக பயன்படுத்துவதாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி பத்திரிக்கைச் செய்தி குறித்த அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க இம்முறைமன்ற நடுவத்தின் 22.06.2018 நாளிட்ட அறிவிப்பாணையின்படி திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்பட்டது.

திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் 06.07.2018 நாளிட்ட அறிக்கையில் மாநகர நல அலுவலர் உள்ளிட்ட சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் துப்புரவுப் ஆய்வாளர், துப்புரவுப் பணி மேற்பார்வையாளர் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் பெயர் மற்றும் எண்ணிக்கை விபரம் தெரிவிக்கப்பட்டது.

இம்முறைமன்ற நடுவத்தின் 07.09.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி 01.11.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் திண்டுக்கல் மாநகராட்சியில் துப்புரவுப் பணி மேற்பார்வையாளராக பணிபுரியும் திரு. மா. வீரகொண்டையன் மற்றும் திரு. எம். காளிமுத்து ஆகியோர் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் பத்திரிக்கையில் வந்துள்ள செய்திக்கும் தங்களுக்கும் சம்மந்தமில்லை என்றும், டாக்டர் அனிதா என்பவர் மாநகராட்சி நல அலுவலராக உள்ளார் என்றும், 400க்கும் மேற்பட்ட துப்புரவுப் பணியாளர்கள் உள்ளனர் என்றும், தனியார் மூலம் 200க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிகின்றனர் என்றும், மாநகராட்சி துப்புரவுப் பணியில் 188 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், தங்களது பகுதிக்கு எத்தனை பேர் பணிக்கு வர வேண்டுமோ அத்தனை பேரும் வேலைக்கு வருவார்கள் என்றும், மாநகராட்சி பணியாளர்களுக்குத் தனியாக வருகைப் பதிவேடு பராமரிக்கப்படுகிறது என்றும் மாநகராட்சியில் இரண்டு தனியார் நிறுவன துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிகின்றார்கள் என்றும் தெரிவித்துள்ளார்கள். மேலும் தங்களுக்கு தனிப்பட்ட முறையில் எந்த குறைபாடும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்கள்.

இம்முறைமன்ற நடுவத்தின் 08.11.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் பத்திரிக்கைச் செய்தி குறித்து திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் 24.12.2018 நாளிட்ட அறிக்கையில் ஜூன் 2018 நக்கீரன் வார இதழில் திண்டுக்கல் மாநகராடசி சுகாதாரப் பிரிவில் நடைபெறும் முறைகேடுகள் குறித்து மாநகர் நல அலுவலர் மீது சுமத்தப்பட்ட புகார் சம்மந்தமாக விசாரணை செய்ததில், தனியர் மீது சுமத்தப்பட்ட புகாரில் மெய்த்தன்மை இல்லையெனத் தெரியவருகிறது என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் திண்டுக்கல் மாநகராட்சியின் மாநகர் நல அலுவலர் மீது பத்திரிக்கைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார், விசாரணையின்போது அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் மாநகர் நல அலுவலர் குறித்து தெரிவிக்கப்பட்ட புகார் குறித்து விசாரணை செய்ததில், தனியர் மீது சுமத்தப்பட்ட புகாரில் மெய்த்தன்மை இல்லை என தெரிவித்துள்ளதை ஏற்று, இப்புகார் தொடர்பான தொடர் நடவடிக்கையினை கைவிடலாமென முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 8-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொ).

பெறுநர்
ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரி